

நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம், சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் அமைச்சகம் கேபினட் அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை நேற்று முன்தினம் (12.02.2025) புதுதில்லி சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் சந்தித்துப் பேசினார். இந்நிகழ்வின்போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு உடனிருந்தார்.

### கூடுதலாக மாநில வல்லுநர் மதிப்பீட்டுக்குழு அமைக்க அனுமதி மற்றும்

# தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நிதி அளித்திடுவீர்!

## ஒன்றிய அமைச்சரிடம் – அமைச்சர் தங்கம் தென்னரசு கோரிக்கை!

புதுடெல்லி, பிப்.14-

தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நிதியுதவி கோரி ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களிடம் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கோரிக்கை மனு அளித்தார்.

தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (12.02.2025), புது தில்லியில், ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை சந்தித்து, தமிழ்நாடு அரசின் பல திட்டங்களுக்கு அனுமதி மற்றும் நிதி கோரி கோரிக்கை மனு அளித்தார். இந்நிகழ்வின்போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு உடனிருந்தார்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில், 1,50,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட தொழில்துறை கொட்டகைகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று அறிவிப்பை வெளியிட்டமைக்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்ச ருக்கு நன்றி தெரிவித்ததுடன், ஏப்ரல் 2025 உடன் முடிவுக்கு வரவுள்ள, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு (SEAC) ஆகிய வற்றின் மறுசீரமைப்புக்கான அரசின் முன்மொழிவின் மீது விரைந்து அறிவிக்கை வெளியிடுமாறும் நிதி யமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு விரைவான அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக ஒரு கூடுதல் மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு (SEAC 2) அமைக்க ஏற்கெனவே அமைச்சகத்திற்கு தமிழ்நாடு அரசு கருத்துருவை சமர்ப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த முன்மொழிவுக்கு விரைந்து அனுமதி வழங்குவதாக ஒன்றிய அமைச்சர் உறுதியளித்தார்கள்.

#### தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோரத்தை மேம்படுத்துதல்!

மேலும், இக்கலந்துரையாடலின் போது, தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோர மற்றும் வன சுற்றுச்சூழல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பசுமைக் கவசத்தை உருவாக்குவதற்கான புதிய திட்டத்திற்கு காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல்திட்டம் மற்றும் பசுமை இந்தியா இயக்கம் ஆகியவற்றின் கீழ் ரூ.27.53 கோடிக்கு அனுமதி வழங்குமாறு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை அமைச்சகத்திடம் கோரப்பட்டது. இத்திட்டம் இயற்கை சார்ந்த தீர்வுகள் மூலம் மாவட்டத்தில் பல கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை புலிகள் காப்பகத்தின் இடையகப் பகுதியிலிருந்து, தெங்குமரஹாடா கிராமத்தில் வசிப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கு தேவைப்படும் ரூ.74.4 கோடி ரூபாயை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணைய (CAMPA) நிதியிலிருந்து வழங்கக்கோரி தமிழ்நாடு அரசு கருத்துரு சமர்ப்பித்துள்ளது. அந்தப் பகுதியில் புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவ த்தையும், அடிக்கடி ஏற்படும் மனித வனவிலங்கு மோதல்கள் உள்ளூர் சமூகத்தின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிப்பதையும் கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்கு விரைந்து அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

#### ஒன்றிய அமைச்சர் ஆதரவு!

கோரிக்கை மனுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாநில அரசின் முயற்சிகளுக்கு தனது அமைச்சகத்தின் ஆதரவை வழங்குவதாக ஒன்றிய அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். இந்த சந்திப்பின் போது ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற துறை அமைச்சகத்தின் செயலாளர் தன்மய் குமார் மற்றும் கூடுதல் செயலாளர் நரேஷ் பால் கங்வார் மற்றும் வனத் துறை டைரக்டர் ஜெனரல் சுஷில் குமார் அவஸ்தி ஆகியோர் உடனிருந்தனர்.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 14 ஊராட்சிகளுக்கு தூய்மை பணிகளை மேற்கொள்வதற்காக மின்கலன் வாகனங்களை ஊராட்சி மன்ற தலைவர்களிடம் வழங்கும் நிகழ்வில் சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமார், மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

### நெல்லை மாவட்டம் – இராதாபுரம் வட்டம் –

# வள்ளியூர் பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்துகள்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை.பிப்.14.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் வள்ளியூர் பேருந்து நிலையத்தில் புதிய பேருந்துகளை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா. சுகுமார் ஆகியோர் துவக்கி வைத்தும்,வள்ளியூர் அரசு தலைமை மருத்துவமனை கட்டுமான பணிகள், வள்ளியூர் புதிய சந்தையினை, வள்ளியூர் புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்பெறும் வகையில் குடிநீர் வசதி, சாலை வசதி, பேருந்து வசதிகள், மருத்துவ வசதி உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.அதன் அடிப்படையில் நெல்லை மாவட்டம் வள்ளியூர் பேருந்து நிலையத்திலிருந்து களக்காடு, சேரன் மகாதேவி வழியாக திருநெல்வேலி பேருந்து நிலையத்திற்கும், திருநெல்வேலியில் இருந்து பாபநாசத்திற்கும் செல்லும் வகையில் புதிய பேருந்துகள் இன்றைய தினம் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும் முதலமைச்சர் அவர்கள் வள்ளியூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம மக்களின் கோரிக்கையினை ஏற்று இராதாபுரம் வட்டம் வள்ளியூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூபாய் 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததன் அடிப்படையில் வள்ளியூர் அரசு தலைமை மருத்துவமனை கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மருத்துவமனையின் முதல் தளத்தில் டயாக்னாஸ்டிக் சேவைகள்,சிடி ஸ்கேன்கள், டிஜிட்டல் எக்ஸ்ரே,அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்,இசிஜி போன்ற வசதிகளும் அனைத்து வெளிநோயாளிகள் பிரிவுகள்,பொது மருத்துவம், மருந்தகம்,மகப்பேறு குழந்தைகள் நலம் இஎன்டி,கண் சிகிச்சை பிரிவு,எலும்பு மருத்துவம், மனநலம், தோல் பிரிவு, நவீன சமையலறை,பிணப்பரிசோதனை மையமும்,

இரண்டாம் தளத்தில் அனைத்து உள்நோயாளி பிரிவுகள், பொது மருத்துவம்,அறுவை சிகிச்சை, கண் பிரிவு,குழந்தைகள் நலம்,எலும்பு மருத்துவம்,மனநலப் பிரிவு, டயாலிஸிஸ் பிரிவுகளும், மூன்றாம் தளத்தில் தீவிர சிகிச்சை பிரிவு,4 நவீன அறுவை அரங்குகள்,(பொது அறுவை சிகிச்சை, எலும்பு பிரிவு,மகளிர் பிரிவு,கண் நோய் பிரிவுகளும்)இதனைத் தவிர முதன்முதலாக முதியோர் பிரிவு,மது போதை மீட்பு பிரிவு,காச நோய் பிரிவு, எச்ஐவி சிகிச்சை மையம் போன்ற வசதிகள் இம்மருத்துவமனையில் செயல்படுத்தப்படும்.

மருத்துவமனையின் கட்டுமானம் பணிகள் விரைந்து முடித்து செப்டம்பர் மாதம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து வள்ளியூர் பேருந்து நிலையம் அருகில் முதலமைச்சர் அவர்களால் ரூபாய் 6.03 கோடியில் திறந்து வைக்கப்பட்ட புதிய சந்தையில் அடிப்படை வசதிகள் குறித்தும்,ரூபாய் 12.13 கோடியில் வள்ளியூரில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளையும் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா. சுகுமார் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

நிகழ்வில் இணை இயக்குநர் மருத்துவர் லதா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், மாவட்ட துணை செயலாளர் நம்பி,வள்ளியூர் சேதுராம லிங்கம் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





தியாகராயர்நகர் முன்னாள் பகுதிச் செயலாளர்

மறைந்த மாவீரன்

பழக்கடை கி.ஜெயராமன்

தோற்றம் : 15-10-1933 ■ மறைவு : 14-02-1985

41-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நாள் : 14-02-2025

இதயத்தை இனிய தலைவருக்கு தந்துவிட்டு
எங்களை விட்டுச்சென்ற சுயமரியாதை வீரரே!...
நீங்கள் காட்டிய
கலைஞரின்
பாதையில்...
உங்கள் தொண்டர்கள் நாங்கள் நடக்கும் போது
உங்கள் இலட்சிய பயணம் எப்படி முடியும்?

என்றும் உங்கள் நினைவில்

மகன். ஜெ.ஜானகிராமன் B.A.,

தலைமை பொதுக்குழு உறுப்பினர் – சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.